DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 259/2010 |
| Deposition of Witness for | Prosecution Pw 7 |
| Name | ஜேம்ஸ் |
| Father / Husband Name | ராஜாமணி |
| Village | மேட்டுப்பட்டி |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 16th October 2023.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகின்றேன். நான் டைல்ஸ் வேலை செய்து வருகின்றேன். கடந்த 04.07.2010 ம் தேதி பகல் 05.30 மணியளவில் நானும், என் நண்பர் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் தொண்டி ரோட்டில் ஆண்டிச்சியூரணி செல்வதற்கு முன்னால் உள்ள இடத்தில் நின்று கொண்டிருந்த போது காளையார்கோவில் காவல் நிலைய போலிசார் எங்கள் இருவரையும் அழைத்து விபத்து சம்பந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் தயார் செய்தவை தான். பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் சேர்த்து கிருஷ்ணமூர்த்தி என்பவரும் 2 வதாக சாட்சி கையொப்பம் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியும் என்றால் தெரியும் விபத்து நடந்தது பற்றி எழுதியிருந்தார்கள். சம்பவ இடத்திற்கு வடக்கு பக்கம் என்ன இருந்தது என்றால் பனைமரம். அதை பற்றி அதில் குறிப்பு இருந்ததா என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு தெற்கு பக்கம் என்ன இருந்தது என்றால் கண்மாய் கரை இருந்தது. சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் என்ன இருந்தது என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு மேற்கு பக்கம் என்ன இருந்தது என்றால் ஞாபகமில்லை.

2) நான் கையொப்பம் செய்த தேதியில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 1 கையொப்பம் தான் செய்தேன். நான் சொல்வது போல் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 16.10.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**